# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2114/5 - 2019 මාර්තු මස 11 වැනි සඳුදා - 2019.03.11

*2114/5 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: MUL/LND/02/ACQV/80

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2015/PC/234

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்தின், முலட்டியன பிரதேச செயலகப் பிரிவின் பெரகம வடக்கு கிராம அலுவலர் பிரிவின் பெரகம கிராமத்தில் அமைந்துள்ளதும் 2018.10.31 ஆந் திகதி நில அளவை அதிபர் அவர்களினால் தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராம வரைபட இல. 91 இல் மேலதிக இல. 63, தாள் இல. 75 எனக் காட்டப்பட்டுள்ள காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

**1. துண்டு இல. 956**

காணியின் பெயர் : கோன்கஹவத்ததெனிய மற்றும் கஜூகஹ தெனிய; விபரம் : (கைவிடப்பட்ட) வயல்; உரிமை கோருவோர் : அமரசேன சமரசிங்க மெதகொரட்டுவ, பெரகம, வடக்கு மாகந்துர; விஸ்தீரணம் : 0.0323 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 957**

காணியின் பெயர் : கோன்கஹவத்ததெனிய மற்றும் கஜூகஹ தெனிய; விபரம் : (கைவிடப்பட்ட) வயல்; உரிமை கோருவோர் : அமரசேன சமரசிங்க மெதகொரட்டுவ, பெரகம, வடக்கு மாகந்துர; விஸ்தீரணம் : 0.0175 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 958**

காணியின் பெயர் : கோன்கஹவத்ததெனிய; விபரம் : (கைவிடப் பட்ட) வயல்; உரிமை கோருவோர் : அரசு; விஸ்தீரணம் : 0.0036 ஹெக்டயார்.

**4. துண்டு இல. 959**

காணியின் பெயர் : கோன்கஹவத்ததெனிய மற்றும் கஜூகஹ தெனிய; விபரம் : (கைவிடப்பட்ட) வயல்; உரிமை கோருவோர் : அமரசேன சமரசிங்க மெதகொரட்டுவ, பெரகம, வடக்கு மாகந்துர; விஸ்தீரணம் : 0.0246 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக் காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முலட்டியன பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சுசன்த அத்தநாயக்க,
பிரதேச செயலாளர்,
முலட்டியன.

பிரதேச செயலகம்,
முலட்டியன,
2019, மாச்சு 07.

3 - 1248